**மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குத்தகை வாடகை பதிவேட்டின் படி 2016 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய குத்தகை வாடகை நிலுவை ரூபா 3,102,927 ஆகக் காணப்படுகின்ற போதிலும் நிதிக்கூற்றில் ரூபா 1,735,767 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 1,367,160 தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சந்தைக்கடை வாடகைப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய சந்தைக் கடை வாடகை நிலுவை ரூபா 1,096,325 காணப்படுகின்ற போதிலும், நிதிக்கூற்றில் ரூபா 955,850 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் அறவிடவேண்டிய சந்தைக் கடை வாடகை ரூபா 140,475 தொகையினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகளும் கட்டிடங்களும் | 113,084,827 | காணி உறுதி |
| பொறி இயந்திரம் | 1,809,578 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 11,886,590 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்காக சபையினால் தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 15,595,655 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 30,429,948 ஆக இருந்தது.

**2.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்**

சபையினால் பேணப்படும் காசேட்டின் படி மீளாய்வாண்டின் ஒவ்வொருமாத இறுதியிலும் ரூபா 22.17 மில்லியன் முதல் ரூபா 32.84 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்படுகின்றது. இதனை வட்டி உழைக்கும் நிலையான வைப்பு அல்லது அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால்

சபையானது வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 2.75 மில்லியன் தொகை வட்டி வருமானத்தை இழந்து வருகின்றது.

**2.3 வருமான முகாமைத்துவம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 955,850 தொகையான சந்தைக் கடை வாடகையையும், ரூபா 1,735,767 தொகையான குத்தகையையும், ரூபா 673,800 தொகையான வீதவரியையும் மற்றும் ரூபா 19,310 தொகையான உரிமைக்கட்டணத்தையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபை அங்கத்தவர் ஒருவரால் சபையிடமிருந்து 2009 ஆம் ஆண்டு வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட படகு இயந்திரத்தை சபையிடம் மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் போது UNDP நிறுவனத்திடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டர் கிரேடர் இயந்திரத்தை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும**

**4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| **அறிக்கைக்கான தொடர்பு** | | **உள்ளடங்கப்பட்ட விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 2.2.2 | மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட 29 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 2.2.4 | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்காமை. |

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாடுகள்** | **விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்** |
|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடுகளை பேணுதல்.<br>(ii) பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் |